Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 31/2024**

**Deposition of PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சௌந்தரராஜன் | ஜாதி | : | |
| த/பெ | : | கனகராஜ் | தொழில் | : | இன்சூரன்ஸ் ஏஜென்ட் |
| கிராமம் | : | அம்பாத்துரை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

(எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அம்பாத்துரையில் குடியிருந்துகொண்டு இன்சூரன்ஸ் ஏஜென்ட்டாக பணிபுரிந்து வருகிறேன். இன்சூரன்ஸ் ஏஜென்ட் தொழிலை தவிர நீங்கள் ரியல் எஸ்டேட் மற்றும் வட்டி தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல, ரியல் எஸ்டேட் தொழிலை சேர்த்து செய்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள சாட்சி மோகனும், நீங்களும் ரியல் எஸ்டேட் தொழிலில் பங்குதாரர்கள் (Partners) என்றால் சரியல்ல. எதிரி உங்களிடம் எந்த தேதியில் ரூ.1,00,000/- கடன் கேட்டார் என்று உங்களுடைய அறிவிப்பு, வழக்கு , நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். எதிரி உங்களிடம் எந்த தேதியில் ரூ.1,00,000/- கடன் கேட்டார் என்று உங்களுடைய அறிவிப்பு, வழக்கு , நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிட்டு சொல்லாமல் வழக்கிற்காக சொல்லியுள்ளதாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

ரூ.1,00,000/- த்தை எந்த விதமாக எதிரிக்கு கொடுத்தீர்கள் என்று குறிப்பிட்டு உங்களுடைய வழக்கு, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, ரொக்கமாக கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன்.

எதிரியும், எதிரியின் கணவர் பொம்மையன் இரண்டு பேரும் உங்களிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரி எந்த தேதியில் உங்களிடம் காசோலையை கொடுத்தார் என்று நீங்கள் வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, பணத்தை கொடுக்கும் போது காசோலை கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன்.

நீங்கள் சொல்வது போல் எதிரி இந்த வழக்கு காசோலையை உங்களிடம் 25.06.2023 அன்று கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் எதிரியின் கணவரிடம் 27.06.2022 அன்று வங்கி பரிவர்த்தனை மூலம் ரூ.2,00,000/- கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளேன். ஆனால் இந்த வழக்கிற்கும் அந்த பரிவர்த்தனைக்கும் சம்மந்தம் இல்லை. இவ்வழக்கு காசோலையை எதிரி உங்களிடம் தரவில்லை என்றால் சரியல்ல. 27.11.2023 அன்று எதரி உங்களுக்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் கசோலையை வசூலுக்கு செலுத்தி 14.04.2023 அன்று திருப்பப்பட்டது என்று சொல்வது தவறு என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல, நான் 14.08.2023 ல் தான் காசோலை திருப்பப்பட்டதாக என்னுடைய அறிவிப்பில் கூறியுள்ளேன்.

உங்களிடம் காட்டப்படும் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் தவணை தவறிய வட்டி செலுத்த வேண்டும் என்று சௌந்தரராஜன் கோரியுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது உண்மையல்ல. உங்களிடம் காட்டப்படும் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் எமது கட்சிக்காரரிடமிருந்து பெற்ற வெற்று ஆவணங்களை திரும்ப கொடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது உண்மையல்ல. நீங்கள் இவ்வழக்கு காசோலை தொகையை எதிரிக்கு கொடுக்கவில்லை என்றும், எதிரி நீங்கள் சொல்லும் தேதியில் காசோலையை உங்களிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

எதிரி உங்களிடம் ரூ.1,00,000/- வாங்கவில்லை என்றும், எதிரி உங்களிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையெழுத்து தவறாக

உள்ளது என்பதற்காக சட்ட நடவடிக்கை எதுவும் மேற்கொண்டீர்களா என்றால் அதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். கையெழுத்து மாறுபட்டுள்ளதால் வேறு காசோலையை எதுவும் எதிரியிடம் இருந்து நீங்கள் கேட்கவில்லை என்றால் சரிதான்.

எதிரி உங்களிடம் 25.06.2023 ஆம் தேதியில் சின்னாளபட்டியில் கேரளா போர்டு சர்வீஸ் கடையில் வைத்து திரு. மோகன் என்பவர் முன்பு பணம் பெற்றுள்ளார் என்று கூறுயுள்ளது பொய் என்றால் சரியல்ல, உண்மை தான். எதிரியின் கணவர் பொம்மையன் சொன்ன தேதியில் தான் பொறுப்புக்காக தான் இந்த காசோலை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் கையெழுத்து காசோலையில் மாறுபட்டுள்ளதை எந்த தேதியில் எதிரிக்கு தெரியப்படுத்தினீர்கள் என்று புகாரிலும், அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சாட்சி இந்த கேள்விக்கு பதில் அளிக்கவில்லை. சம்மந்தம் இல்லாமல் பதில் அளிக்கிறார்.

எதிரி அளித்த காசோலைகள் மூன்றில் ஒரு காசோலையை வைத்து லாபம் அடையலாம் என கருதி எதிரிக்கு எதிராக இந்த வழக்கை நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 2022 ல் எதிரியின் கணவர் கொடுத்த ரூ.2,00,000/- தொகைக்கு பொறுப்புக்காக கொடுத்த காசோலையை வைத்து எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor